**STARTING TIME 11.05 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 121/2019**

Deposition of **D.W.3** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assisatant of this court, on 23.01.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **சசிகலா** Father's Name :

Address :

Calling : Age :

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. இவ்வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் என் சகோதரி ஜெயந்தி தாக்கல் செய்துள்ளார். யார் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், அமுதா, அவரது மகன் சத்தீஷ், மூர்த்தி, பெருமாள், முனியம்மாள் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளார், சாட்சி மீண்டும் அந்த 5 பேர் வேறுவழக்கின் பிரதிவாதிகள் என்றும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் பெயர் முனுசாமி மற்றும் அவர் மனைவி இசைவாணி என்று கூறுகிறார்.**

**2. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், எங்கள் இடத்தை மீட்டு தருமாறு கேட்டுள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 13/1 ஆகும், விஸ்தீரணம் கிழக்கு மேற்கு 37–1/2 அடி, வடக்கு**

தெற்கு 122 அடி ஆகும்.

2. நானும், வாதியும் கூட்டுக்குடும்பமாக தான் வசித்து வருகிறோம் என்றால், சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருந்த சமயத்திலும் நானும் வாதியும் கூட்டுக்குடும்பமாகதான் வசித்து வந்தோம் என்றால், சரிதான். எனவே, எனக்கு இவ்வழக்கிற்கு சம்மந்தமான விவரங்கள் அனைத்தும் முழுமையாக தெரியுமா என்றால், முழுமையாக தெரியாது, 2017ம் ஆண்டு எனது அத்தை மகள் பிரேமா என்பவர் சொன்ன பிறகு தான் தாவா சொத்து பற்றிய விவரம் தெரிய வந்தது.

3. 2017ம் ஆண்டிற்கு முன்பு தாவா சொத்தை யார் அனுபவித்து வந்தார்கள் என்று தெரியுமா என்றால், தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் மேற்படி விஸ்தீரணத்தை நான் எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால், வட்டாட்சியர் அலுவலகம் சென்று நான் விசாரித்தபோது வட்டாட்சியரும், சர்வேயரும் தாவா சொத்திற்கு வந்து அளந்து பார்த்தார்கள், அப்போது வட்டாட்சியர் 1ம் பிரதிவாதியிடம் அங்கம்மாள் என்பவர் யார் என்று கேட்டதற்கு, அவரது பாட்டி என்று சொன்னார். அதன்பிறகு அவர்கள் அளந்துவிட்டு போனார்கள். வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நானும் உடன் சென்றேனா என்றால், ஆமாம்.

4. வட்டாட்சியரிடம் தாவா சொத்தை அளந்து தருமாறு மனு எதுவும் கொடுத்தோமா என்றால், கொடுத்தோம், மனு கொடுத்த 1 மாதத்திற்கு பிறகு தான் அளந்தார்கள். அளந்து பார்த்த பிறகு தான் தாவா சொத்து எங்களுக்கு சொந்தமானது என்று தெரிய வந்ததா என்றால், எனது அத்தையிடம் இருந்த என் ஆயாவின் பெட்டியை உடைத்து பார்த்தபோது அதில் தாவா சொத்திற்கான பத்திரம் இருந்தது, அப்போது தான் தாவா சொத்து எங்களுக்கு சொந்தம் என்ற விவரம் தெரிய வந்தது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

**ENDING TIME 11.21. A.M.**

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2025.01.23 14:03:14 +0530